# உங்கள் பிள்ளையுடன் வீட்டு மொழிகளில் பேசுதல்

பாலர் வகுப்பில் கற்கும் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு ஒரு ஆதாரம்

புதிய மொழியொன்றைக் கற்கும் ஒரு பிள்ளையின் பெற்றோராக, உங்கள் வீட்டு மொழிகளைப் பேணுவதற்கு நீங்கள் ஒரு முக்கிய பங்காற்றுகின்றீர்கள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுவதால், பிள்ளைகளின் நலன், மொழி மற்றும் எழுத்தறிவு விருத்தி, சிந்தித்தல் மற்றும் பகுத்தறிதல், மற்றும் கற்றல் திறன்கள் யாவும் மேம்படுத்தப்படுகின்றன என்பதை ஆராய்ச்சிகள் காண்பித்துள்ளன.



## பல மொழிகளைப் பேசும் பிள்ளைகள்:

### நலன்

- தங்கள் அடையாளத்தைக் குறித்து உறுதியான உணர்வை விருத்திசெய்கிறார்கள்.
- தங்கள் கலாச்சாரம் மற்றும் சமூகங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறார்கள்.
- தன்னம்பிக்கையைப் பெற்று நிலையான சுயமதிப்பை விருத்திசெய்துகொள்கிறார்கள்.
- உறுதியான குடும்ப உறவுகளை விருத்திசெய்துகொள்கிறார்கள்.

### மொழி மற்றும் எழுத்தறிவுத் திறன்கள்

- எழுத்தறிவுத் திறன்களை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியிற்கு மாற்றிக்கொள்ளலாம்.
- தங்கள் வீட்டு மொழியில் கற்றுக்கொண்ட வாசித்தல் மற்றும் எழுதுதல் உத்திகளை இன்னொரு மொழியில் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளும்போது பயனபடுத்தலாம்.

### சிந்தித்தல் மற்றும் பகுத்தறிதற் திறன்கள்

- இசைவிணக்கமுடைய முறைகளில் சிந்திக்கலாம்.
- தங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் எண்ணங்களையும் யோசனைகளையும் சிக்கலான மொழியைப் பயன்படுத்தி பகிர்ந்துகொள்ளலாம்.
- திட்டமிடுதல் மற்றும் தீர்வுகாணல் திறன்களை விருத்திசெய்துகொள்ளலாம்.

### கற்றல் திறன்கள்

- தங்கள் கற்றலில் துணிந்து முற்செல்கிறார்கள்.
- தொடர்பான தகவல்களில் பயனுறத்தக்கதாக கவனத்தை ஒருமுகப்படுத்துகிறார்கள்.

# உங்கள் பிள்ளையுடன் உங்கள் வீட்டு மொழிகளைப் பயன்படுத்துங்கள்:

### பேச்சுரீதியான மொழி விருத்தியை ஆதரிப்பதற்கு:

- ஒன்றாக விளையாடும்போது உங்கள் பிள்ளையுடன் பேசி, நீங்கள் செய்யும் செயற்பாடுகளைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- அன்றாட வேலைகளை ஒன்றுசேர்ந்து செய்யும்போது, முதல், அடுத்து, மற்றும் கடைசியாக எது செய்யப்பட்டது என்பதைப் பற்றி பேசுங்கள்.
- விளையாட்டொன்றை எப்படி விளையாடுவது அல்லது செயற்பாடொன்றை எப்படிச் செய்வது என்பதை குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு விளக்கும்படி உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளியுங்கள்.

### எழுத்தறிவுத் திறன்களை ஆதரிப்பதற்கு:

- தினமும் உங்கள் பிள்ளையுடன் வாசித்து, அக்கதையைப் பற்றி பேசுங்கள், உதாரணத்திற்கு அக்கதை உங்களுக்கு எதை ஞாபகமூட்டுகின்றது என்பதைப் பற்றி.
- உங்கள் வீட்டு மொழிகளில் வாசிக்கக் கற்றுக்கொள்வதற்கு உங்கள் பிள்ளைக்கு உதவுங்கள்.
- உங்கள் வீட்டு மொழிகளில் நீங்கள் வாசிப்பதை அவதானிப்பதற்கு உங்கள் பிள்ளைக்கு வாய்ப்புகளை அளியுங்கள்.

*Supporting English Language Learners in Kindergarten, 2007 இலிருந்து தழுவப்பட்டது

## பாடசாலையில் உங்கள் பிள்ளையின் மொழி விருத்தியை வளர்ப்பதற்கு ஆதரவளியுங்கள்

உங்கள் பிள்ளையின் பாலர்வகுப்பு ஆசிரியர்களுடன் அடிக்கடி பேசி தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் செய்யக்கூடியவை:

- உங்கள் பிள்ளையின் பலம் மற்றும் ஆர்வங்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- பாடசாலைக்கு வெளியே உங்கள் பிள்ளை ஈடுபட்டுள்ள கற்றல் அனுபவங்களைப் பாலர் வகுப்பு ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் ஆங்கில மொழி விருத்தியிற்கு அவர்கள் எவ்வாறு ஆதரவளிக்கின்றனர் என்று வினவுங்கள்.
- உங்கள் பிள்ளையின் வீட்டு மற்றும் சமூக மொழிகளை எவ்வாறு அத்திவாரமாக வைத்து கற்றலை விருத்திசெய்கின்றனர் என்று வினவுங்கள்.
- உங்கள் பிள்ளையின் பேச்சுரீதியான மொழித்திறன்கள் எவ்வாறு விளையாட்டால் ஆதரவளிக்கப்படுகின்றன என்று கேட்டறியுங்கள்.




Ontario Ministry of Education, 2017 இலிருந்து வரையுருவம் தழுவப்பட்டது

## ஆதாரவளங்கள்

www.yrdsb.ca